

அருப்புக்கோட்டை நகராட்சி ஜோதிபுரத்தில் சமுதாயக்கூட கட்டிடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழாவினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி ஆகியோர் இருந்தனர்.




வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் மாநகராட்சி உட்பட்ட அல்லாபுரம் பகுதியில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் வேட்டி சேலை வழங்கும் நிகழ்ச்சியில் வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் கழக நிர்வாகிகளுக்கு வேட்டி சேலை பொங்கல் தொகுப்பு வழங்கினார். இதில் பகுதி செயலாளர் தங்கதுரை, வட்டச் செயலாளர்கள் ச.விநாயகம், தேர்தல் பொறுப்பாளர் சிட்டி பாபு, பகுதி கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.

## களைகட்டுகிறது சென்னை சங்கமம் – 2026

# சிறப்பாக ஒருங்கிணைத்து வரும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.14–

“நாளை முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026” என்றும் “இதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி.” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

**நாளை மறுநாள் முதல் களைகட்டுகிறது சென்னை சங்கமம் 2026.**

**நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான எழுச்சி மேடையாகத் திகழும் சென்னை சங்கமத்திற்கு மீண்டும் நமது திராவிட மாடல் அரசில் புத்துயிர் கொடுத்துள்ளோம். அதனைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வருகிறார் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி.!**

**தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் களிப்புடன் சிறக்க, சென்னையிலும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள கலை நிகழ்ச்சிகளை அனைவரும் காண வேண்டும்! வருக... வருக...**

**சென்னை சங்கமம் 2026 திராவிட பொங்கல் வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்சமூகவலைதளப்பதிவில்குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில்

# ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 14–**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2026) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறு காய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,096 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் தற்போது 3.56 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 37.44 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 31 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

**ஆவின் நிறுவனத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தற்போது அதிகரித்து வரும் கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடியில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன உற்பத்தி ஆலை;

கோடை மற்றும் வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு வருடம் முழுவதும் தரமான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் சிறப்பு பகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் 6.72 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 25 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை;

ஆவின் விற்பனை அதிகரிக்கவும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 21.57 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் 10,000 லிட்டர் நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

பாலின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் திருவண்ணாமலை, கடலூர், கரூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடங்கள்;

என மொத்தம் 80.62 கோடி ரூபாய் செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், பால்வளத் துறைஆணையர்மற்றும்மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், இணை நிர்வாக இயக்குநர் திருமதி ச.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, பண்ருட்டி தெற்கு ஒன்றியத்தில், திராவிடப் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான கபடி போட்டி நடைபெற்றது. ஆண்கள் அணிகளில் முதல் பரிசு சம்மட்டிகுப்பம் அணி, இரண்டாவது பரிசு வேகவேகாக்கொல்லை அணி, மூன்றாவது பரிசு காங்கிருப்பு அணி, நான்காவது பரிசு பேர்பெரியங்குப்பம் அணி, பெண்கள் அணியில் சங்கமம் கல்லூரி முதல் பரிசையும், பெரியகாட்டுபாளையம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டாவது பரிசையும், பேர்பெரியாங்குப்பம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மூன்றாவது பரிசையும் , நெய்வேலி பெண்கள் மேல்நிலைப்பள்ளி அணி நான்காவது பரிசையும் பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பரிசுகள், சான்றிதழ்களை வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் அ.குணசேகரன், ஆர். சந்தோஷ்குமார், டாக்டர். ஆர்.ராஜேஷ், லோகநாதன், மருங்கூர் ஜனார்த்தனன், உதயகுமார், அன்பழகன், சிவகுமார், அன்பழகன், தமிழ்ச்செல்வன், தன்ராஜ், வெங்கடேசன், கிருஷ்ணன், சிவப்பிரகாசம், இளைஞரணி நிர்வாகிகள் வீரபாண்டியன், இளையராஜா, சிவராமன், கமல் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை –

# தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜன. 14–**

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Invest ment Policy) 2026 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டன.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.01.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Investment Policy) 2026 ஆகிய துறை சார்ந்த கொள்கைகளை வெளியிட்டார்.

தமிழ்நாடு, இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், அதிக தொழில்வளம் மிகுந்த மாநிலமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் அதிக முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாட்டை நிலையான உற்பத்திக்கான உலகளாவிய மையமாக மாற்றியமைக்கும் நோக்கில், உலகளாவிய தொழில் சூழலமைப்பு மற்றும் மாநிலத்தின் தேவைகள், ஆகியவற்றை கருத்திற்கொண்டு, துறை சார்ந்த கொள்கைகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்று இவ்விரு கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை (Tamil Nadu Warehousing Policy) 2026**

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, வலுவான சரக்கு போக்குவரத்து (Logistic) கட்டமைப்பு உதவி புரிந்து வருகிறது. இந்த வளர்ச்சியில் சேமிப்புக் கிடங்கு கட்டமைப்பு (Warehousing Infra) மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. எனவே, இக்கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி, மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு, ஒருங்கிணைந்த புதிய கிடங்கு கட்டமைப்பின் வளர்ச்சி (Integrated Greenfield Develop ment), பழைய கிடங்குகளின் திறன் விரிவாக்கம் (Brownfield Capacity Expansion), கிடங்கு துறையில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public, Private Partnership in Warehousing), நிலையான மற்றும் நவீன தொழில்நுட்ப கிடங்குகள் (Sustain & Smart Warehousing), பொருட்களுக்கேற்ற பிரத்யேகக் கிடங்குகள் (Commodity Specific Warehousing) மற்றும் கிடங்குத் துறையில் தொழில் புரிவதற்கு உகந்த எளிய வழிமுறைகள் (Ease of doing Business for Warehousing) ஆகிய 6 கருப்பொருட்களைக்கொண்ட தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை வடிவமைத்து வெளியிடப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

டெல்டா மற்றும் தொழில் துறையில் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு நிதி சார்ந்த சிறப்பு ஊக்க சலுகைகள் வழங்குதல். குறிப்பாக, தகுதியான முதலீடுகளில் 25 சதவிகித நிலையான மூலதன மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்) மற்றும் நில விலை மானியமாக வணிக நில விலையில் 50 சதவிகித சலுகை;

புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கும் போது மேற்கொள்ளப்படும் பசுமை முன்முயற்சிகளுக்கான மதிப்பில் 25 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

பயிற்சி மானியம் புதிய சேமிப்புக் கிடங்குகளின் பணியாளர்களுக்கு தொழிற்நுட்ப பயிற்சி வழங்குவதற்கான தொகையில் 50 சதவிகித மானியம் (ஒரு பணியாளருக்கு ரூ.10,000/ க்கு மிகாமல்);

அரசு நிலங்களில் பெரிய அளவிலான புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு சிறப்பு ஊக்க சலுகைகள்;

பெரிய அளவிலான சேமிப்புக் கிடங்குகள் அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவுவதற்கான முதலீட்டில் 12 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

தொழிற்நுட்பத் துறை, சுகாதார பாதுகாப்புத் துறை, பொறியியல் துறை மற்றும் வேளாண்மை துறைகளின் குறிப்பிட்ட பொருட்கள் சார்ந்த (Commodity specific) புதிய சேமிப்புக் கிடங்குகளில் தொழிற்நுட்ப முன்முயற்சிகளுக்கான செலவில் 25 சதவிகித மானியம் (ரூ.2 கோடிக்கு மிகாமல்);

வணிகம் புரிவதற்கு உகந்த சூழலை வழங்கும் வகையில், வெள்ளை வகை நிலையை (White Category Status) சேமிப்புக் கிடங்குகளுக்கு நீட்டித்தல், ஒற்றை சாளர இணையம் மூலம் அனுமதிகள் வழங்குதல் மற்றும் அரசு தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழிற்பேட்டைகளில் சேமிப்பு கிடங்குகளுக்கு நிலம் ஒதுக்கீடு.

**தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை (Tamil Nadu Circular Economy Investment Policy) 2026**

உலகளாவிய நிலைத்தன்மை மற்றும் வர்த்தகத் தரங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், ஏற்றுமதி போட்டித்திறனை வலுப்படுத்துவதுடன், புதிய முதலீடுகள் ஊக்குவிப்பது, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, சுழற்சி மற்றும் நிலையான உற்பத்தியில் தமிழ்நாட்டின் நிலையை மேலும் மேம்படுத்தி, நிலைத்தன்மையும் நெகிழ்வுத்தன்மையும் கொண்ட வளர்ச்சியை முன்னெடுப்பதன் மூலம் மாநிலத்தை உலகத்தரம் வாய்ந்த உற்பத்தி மையமாக நிலைநிறுத்து வது, தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026ன் முக்கிய நோக்கமாகும்.

**சிறப்பம்சங்கள்**

சுழற் பொருளாதாரம் அடிப்படையிலான உற்பத்தியை விரைவாகப் பின்பற்ற முதன்மைத் துறைகளான ஜவுளி, வாகனத் துறை, மின்னணுவியல் மற்றும் நெகிழித் துறைகளில் தனிக்கவனம் செலுத்துதல்;

மறுசுழற்சி உற்பத்தித் துறையில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், மறுசுழற்சி தொழிற்சாலைகளுக்கு முதலீட்டில் 10 சதவிகித மூலதன மானியம், ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.10,000 வீதம் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மானியம் மற்றும் ஒரு பணியாளருக்கு ரூ.10,000 வீதம் திறன் மேம்பாட்டு ஊக்குவிப்பு மானியம் வழங்குதல்;

கழிவு மேலாண்மை தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு (Technology Enablers/ Platform Entities) முதல் ஆண்டில் 30 சதவிகிதம், இரண்டாம் ஆண்டில் 20 சதவிகிதம் மற்றும் மூன்றாம் ஆண்டில் 10 சதவிகிதம் ஊதிய மானியம் வழங்குதல்;

சுழற்சி பொருளாதார தகவல் தளம், தமிழ்நாடு பசுமை காலநிலை நிதியம், குறைந்த கார்பன் பசுமை தொழிற்பூங்காக்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பசுமை தரவரிசை மதிப்பீடு போன்ற வழிமுறைகளால் இத்துறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026 மற்றும் தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026 ஆகிய கொள்கைகள், இத்துறைகளில் தமிழ்நாட்டை முன்னணி மாநிலமாக நிலை நிறுத்துவதுடன், 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற முதலமைச்சர் அவர்களது இலட்சிய இலக்கினை அடையவும் உதவும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி –மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் – புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

### புதுக்கோட்டை வடக்கு மாநகரம்

அமைப்பாளர் – எம்.எஸ். அஜ்மீர்ராஜா டி.எஸ்.எண். 3088, கீழ 2வதுவீதி, புதுக்கோட்டை.

துணைஅமைப்பாளர்கள் – 1) பி. விமல் 14/21, காமராஜபுரம் 20வதுவீதி, புதுக்கோட்டை, 2) வி. விஜய்முத்துமார்த்தாண்டன் டி.எஸ். எண். 2588, மேல 3வதுவீதி, புதுக்கோட்டை. 3) எஸ். மகேஸ்வரன் 43, போஸ்நகர் 6வதுவீதி, புதுக்கோட்டை. 4) ஏ. மெய்யப்பன் (எ) பிரசாத் 1271, கம்பன்நகர், புதுக்கோட்டை. 5) மு. அஜித் 23, காந்திநகர் 2வதுவீதி, புதுக்கோட்டை.

### புதுக்கோட்டை தெற்கு மாநகரம்

அமைப்பாளர் – கு. பிரகாஷ்ராஜ் 800சி, கடைவீதி, முள்ளூர், புதுக்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் – 1) ஆர்.எஸ். யோகி லெட்சுமி நகர், சமத்துவபுரம், புதுக்கோட்டை – 622005. 2) க. தமிழ்ச்செல்வன் 34/40, வாரிப்பட்டி, ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை – 622003. 3) ரா. ஹரி சௌராஷ்டிரா கீழ வீதி, திருவப்பூர், புதுக்கோட்டை – 622003. 4) ரெ. வினிதா 22, நடு வீதி, கோவில்பட்டி, திருக்கோகாணம், புதுக்கோட்டை – 622002. 5) ஆர்.டி. கோகுல் மலையப்பா நகர், ராஜகோபாலபுரம், புதுக்கோட்டை – 622003.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

இரா. ராஜீவ்காந்தி,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் திருப்பூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் – கே.சி.தெய்வசிகாமணி 91, குருவப்ப நாயக்கன்பாளையம், சின்னப்புத்தூர் கிராமம், தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – சிட்டி. ஜி. பிரபு 34பி, முத்துக்குமார் நகர், வெள்ளக்கோவில் – 638111, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – கவின் ஆ. நாகராஜன் 86/ஏ, கண்ணன் நகர், காந்திபுரம் கிழக்கு, அலங்கியம் ரோடு, தாராபுரம் – 638656, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) மு. இராமசாமி 180, கோவை சாலை, குண்டடம் – 638702, திருப்பூர் மாவட்டம். 2) பி. நந்தகுமார் 7/63, பள்ளிபாளையம், எல்லப்பாளையம்புதூர் அஞ்சல், கொடுவாய் – 641660, திருப்பூர் மாவட்டம். 3) நிரஞ்சன் (எ) கிருஷ்ணசாமி 1/359, காமராஜ் நகர், அலங்கியம், தாராபுரம் – 638657, திருப்பூர் மாவட்டம். 4) பி. ராஜேந்திரன் கள்ளிகாட்டு தோட்டம், பூமாண்டன் வலசு, மங்களப்பட்டி அஞ்சல், முத்தூர் வழி – 638105, திருப்பூர் மாவட்டம். 5) பி.வி. சுப்பிரமணியம் மன்றாடியார் நகர், குட்டப்பாளையம் அஞ்சல், நத்தக்கடையூர் வழி, காங்கேயம் தாலுக்கா – 638108, திருப்பூர் மாவட்டம். 6) பழனி. சதீஷ் 100/92, தேவி கார்டன், குழந்தை கவுண்டன் வலசு, நத்தப்பாளையம் அஞ்சல், மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-01-2026.

வி.பி.கலைராஜன் ,
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி